சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.12.11.2025.
OS.No.678/2018
PW1 (மறு அழைப்பு) : பன்னீர்செல்வம் (வயது 70 ) த/பெ. கோவிந்தசாமி
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் இலால்குடி மேல வீதியில் குடியிருந்தேன் என்றால் சரிதான். 3 ஆம் வாதி இலால்குடி வடக்கு வீதியில் குடியிருந்தார் என்றால் சரிதான். 4 ஆம் வாதி பெங்களூரில் குடியிருக்கிறார். 5,6 வாதிகள் திருச்சியில் குடியிருக்கிறார்கள். இறந்து போன 2 ஆம் வாதியின் வாரிசுகளான 7 முதல் 9 வாதிகள் இலால்குடி, வளையல்கார தெருவில் குடியிருக்கிறார்கள்.

எனது தரப்பில் மற்ற வாதிகளை சாட்சிகளாக விசாரிக்கிறேனா என்றால் விசாரிக்கிறேன். எனது நிருபண வாக்குமூலத்தை எனக்காக மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் அனைவருக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். நிருபண வாக்குமூலத்திற்கு விவரங்களை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். அதில் மற்ற வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எனது தந்தை 27.09.2015 ல் இறந்தார் என்றால் சரிதான். எனது தாயார் 14.12.2006 ல் இறந்தார் என்றால் சரிதான். எனது பெற்றோர் இறக்கும் முன் வழக்கு சொத்தில் 1 ஆம் பிரதிவாதியிடம் நான் எந்த பாகமும் கேட்கவில்லை என்றால் சரிதான். 2004 ஆம் ஆண்டு எனது தந்தை இறந்துவிட்டதாகவும் அப்போது நான் பாகம் கேட்டதாகவும் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது தவறானது என்றால் சரிதான்.

1 ஆம் பிரதிவாதியான எனது மூத்த சகோதரர் இலால்குடி, நகர கூட்டுறவு வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணியாற்றினார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி 1975 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி பணியில் சேர்ந்து வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தை தவிர எனக்கு பூர்வீக

சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.எனது தந்தை முடக்கு வாதத்தால் 2004 ல் பாதிக்கப்பட்டிருந்ததாக கூறுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக மருத்துவ ஆவணங்கள் எதுவும் எனது கைவசம் இல்லை என்றால் சரிதான்.

வழக்கு சொத்துக்களை பொறுத்து நானே மற்ற வாதிகளோ கடன் எதுவும் வாங்கி திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5, 6 அசல் கிரய பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் அசல் ஆவணங்கள் இரண்டும் 1 ஆம் பிரதிவாதி மாணிக்கம் வசம் உள்ளது. வழக்கிற்காக வா.சா.ஆ.5,6 கிரய ஆவணத்தின் நகலை எடுத்த பிறகாவது அதனை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

வா.சா.ஆ.5 ஆவணத்தை எழுதி கொடுத்த நபர் கிரய தொகையை தான் ஏற்கனவே பெற்றிருந்த கடனை தீர்த்த வகையில் பற்றாகிவிட்டதாக ஆவணத்தில் கண்டுள்ள விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நகர கூட்டுறவு வங்கியில் 1 ஆம் பிரதிவாதி நகை மதிப்பீட்டாளராக வேலை பார்த்ததின் அடிப்படையில் கடன் பெற்று, அதிலிருந்து கிடைத்த தொகையை தான் வா.சா.ஆ.5 கிரய ஆவணத்திற்கான கிரய தொகையை பற்றுவழி செய்து அவரது தாயார் பெயரில் கிரய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனது அப்பா மற்ற அனைவரும் சேர்ந்து சம்பாதித்த தொகையை வைத்து கிரயம் வாங்கியது.

வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்பட்ட கால கட்டத்தில் நான் இளவராக இருந்தேன் என்றால் சரிதான். அதனால் எனது பங்களிப்பை வைத்து கிரயம் வாங்கியதாக கூறுவது முற்றிலும் பொய்யானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படும் காலத்தில் மற்ற வாதிகளும் இளவர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.5 கிரய ஆவணம் ஏற்படும் காலத்தில் எனக்கும் மற்ற வாதிகளுக்கும் வருமானம் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா ஏ அட்டவணை சொத்தில் நகை கடை

வைத்திருந்தேன் என்பதை காட்டுவதற்கு உரிமம் போன்ற ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல், எந்த ஒரு கடையும் தாவா ஏ அட்டவணை சொத்தில் வைத்திருக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் 6 ஆம் வாதி யுவராஜுக்கு வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 16 வயதுடைய இளவர் என்றும் தற்போது அவர் மேஜராகிவிட்டார் என்றால் சரிதான். 6வது வாதி மேஜராகிவிட்டார் என்பதற்கு சட்ட பூர்வ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 9 வாதிகளாகிய நாங்கள் ஒன்றாக இல்லாமல் வேறு வேறு பகுதியில் தனிதனியாக வசித்து வருகிறோம் என்றால் தற்போது தனிதனியாக வசித்து வருகிறோம், அதன் முன்பு ஒன்றாக தான் இருந்தோம்.

2018ல் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் அனைவரும் தனி தனி முகவரியில் வசித்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலத்திலும் வழக்குரையில் கண்டுள்ளவாறு தனி தனியாக தான் வசித்து வந்தோம் என்றாலும் வழக்கு சொத்தில் ஒன்றாக இல்லை என்றாலும் சரிதான்.

வழக்கு சொத்தில் நாங்கள் அனைவரும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்பதால் பிரிவு 37(2)ன் கீழ் வழக்கு மதிப்பீடு செய்துள்ளது தவறானது என்றால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்தில் வழககு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்தே 1 ஆம் பிரதிவாதி மாணிக்கம் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

தாவா ஏ அட்டவணை சொத்தை பொறுத்து எழுதி வைத்த வா.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் 2வது பக்கத்தில் 07.09.2005ல் உயில் ஆவணம் மாணிக்கத்திற்கு ஆதரவாக அவரது தகப்பனார் எழுதி வைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் சொல்லப்பட்டுள்ளது ஆனால் அவ்வாறு எழுதி வைக்கவில்லை.

அவ்வாறு உயில் எழுதி வைத்ததாக சொல்லியுள்ள விவரம் வழக்கு தாக்கல் செய்யும்போதே எனக்கு தெரிந்து அதற்கான ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல்

செய்துள்ளேன் என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். நான் வழக்கறிஞரிடம் கொடுத்ததாக சொல்லும் ஆவணம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணமா என்றால் சரிதான். இந்த ஆவணமும் வழக்குரையுடன் நான் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்களின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இதுநாள் வரை வா.சா.ஆ.7 ல் குறிப்பிட்டுள்ள உயில் ஆவணத்தை பொறுத்து எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா, அம்மா இருவரும் தாவா ஏ அட்டவணை சொத்தை பொறுத்து 1 ஆம் பிரதிவாதி கடன் பெற்று அதற்கான கிரய தொகையை செலுத்தியுள்ளார் என்பதால் 1 ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக உயில் ஆவணம் 07.09.2005 ஆம் தேதியன்று எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றும், எனது பெற்றோர் இறப்பிற்கு பின்பு மேற்படி உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்து அதன் அடிப்படையில் 1 ஆம் பிரதிவாதி தனது மகனான 2 ஆம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.7 ஆவண முழு விவரமும் எனக்கு தெரியும் என்றும் அதனால் தாவா ஏ அட்டவணை சொத்தை பொறுத்து பாக உரிமை கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்து மட்டுமே எனது தந்தை பெயரில் உள்ளது என்றும்அதனை பொறுத்து பாகம் பிரித்து கொள்வதற்கு 1 ஆம் பிரதிவாதி எப்போதும் தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல. ஆனால், நான் தான் தாவா ஏ அட்டவணை சொத்தில் பாகம் கேட்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.5 கிரய ஆவணம் ஏற்பட்ட காலத்தில் நான் இளவராக இருந்ததால், எனக்கு வருமானம் எதுவும் இல்லை என்றும் எனது வருமானத்தில் அந்த சொத்தினை கிரயம் வாங்கவில்லை என்றும் அந்த சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை

கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்பதை காட்டும் வகையில் எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்திற்கான வரி வகையறாக்களை 1 ஆம் பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது அப்பா உயிருடன் இருக்கும் வரை அவர் கட்டி வந்தார், அவர் கை கால் வராமல் சென்ற பிறகு 1 ஆம் பிரதிவாதி வரியை கட்டி வருகிறார்.

07.09.2005 ஆம் தேதியிட்ட உயில்நடைமுறைக்கு வந்த பின்னிட்டு தாவா ஏ அட்டவணை சொத்திற்கான வரியை 1 ஆம் பிரதிவாதியே நாளது தேதி வரை உரிமையாளர் என்ற முறையில் செலுத்தி வருகிறார் என்றால் அவர் குடியிருப்பதால் அவர் வரி செலுத்தி வருகிறார். அதனால் நான் கேட்டுள்ள தாவா ஏ அட்டவணை சொத்திற்கான பாக உரிமை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் தாவா ஏ அட்டவணை சொத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/ signed/
பன்னீர்செல்வம்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.12 19:17:09 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி